தினமணி சென்னை 5

வியாழக்கிழமை, 30 ஜூலை 2020

# நாளை வலைதள கருத்தரங்கு

சென்னை, ஜூலை 29: பாடத்திட்ட செறிவூட்டல் தொடர்பான தேசிய வலைதளக் கருத்தரங்கம் வரும் வெள்ளிக்கிழமை (ஜூலை 31) நடைபெறுகிறது. ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் பங்கேற்று பயன்பெறலாம்.

இதுதொடர்பாக ராமச்சந்திரா கல்வி நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

பாடத்திட்டம் செறிவூட்டல் என்ற தலைப்பிலான வலைதளக் கருத்தரங்க நிகழ்வு வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறவிருக்கிறது. இதில், பல்கலைக்கழக மானியக் குழு துணைத் தலைவர் பூஷண் பட்வர்தன், கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தரவரிசை அமைப்பின் உறுப்பினர் செயலர் அனில் குமார், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் ஆலோசகர் கே. ரமா, ராமச்சந்திரா கல்வி நிறுவன துணைவேந்தர் டாக்டர் பி.வி.விஜயராகவன், ஆய்வுத்துறைத் தலைவர் டாக்டர் எஸ்.பி.தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள் https://bit.ly/3hsJV27 என்ற இணையதள முகவரியில் பதிவு செய்ய வேண்டும். ராமச்சந்திரா கல்வி நிறுவனத்தின் (எஸ்.ஆர்.இ.ஹெச்.இ.ஆர்.) முகநூல் மற்றும் யூடியூப் பக்கங்களின் வாயிலாக கருத்தரங்கில் இணையலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.